DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure Judicial Form No.53)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, SIVAGANGAI.

| | |
|---|---|
| Calender | Case No. CC . 435/2019 |
| Miscellaneous | |
| Preliminary Register | |
| Sessions | |
| Deposition of Witness for | Prosecution Pw 1 |
| Name | காயாம்பு |
| Father / Husband Name | கந்தன் |
| Village | |
| Taluk | சிவகங்கை |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873 of the date of 21st June 2023.

---

**(எதிரி ஆஜரில்லை. எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது).**

**முதல் விசாரணை:-**

1) நான் கீழக்கண்டனியில் குடியிருந்து வருகின்றேன். நான் எலெக்ட்ரிசியன் வேலை செய்து வருகின்றேன். விபத்தில் இறந்த நபர் என் அண்ணன். கடந்த 29.04.2018 ம் தேதியன்று காலை 09.00 மணிக்கு என் அண்ணன் ஐஸ் கம்பெனியில் ஐஸ் வாங்குவதற்காக சைக்கிளில் சென்று வாங்கி விட்டு திரும்ப வரும் போது RDM காலேஜ் ரோடு CSI சர்ச் அருகே வடக்கிலிருந்து தெற்கு நோக்கி வந்து கொண்டிருந்த போது பின்னால் இருசக்கர வாகனத்தில் வந்த எதிரி பாலகிருஷ்ணன் அதிவேகமாக வந்து என் அண்ணன் சைக்கிள் மீது மோதி

விபத்தை ஏற்படுத்திவிட்டார்.

2) நானும், பால்பாண்டியும் பின்னால் வந்து கொண்டிருந்ததால் விபத்தை பார்த்தேன். என் அண்ணனுக்கு வலது கன்னத்தில் காயம் ஏற்பட்டது. நான் உடனே வழிபோக்கு ஆட்டோவை பிடித்து நானும், பால்பாண்டி என்பவரும் என் அண்ணனை சிவகங்கை அரசு மருத்துவமனையில் கொண்டு சேர்த்தோம். இது சம்பந்தமாக நான் தான் சிவகங்கை நகர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன்.

3) என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்தது தான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். (**அந்த புகார் மனு அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). பின்னர் என் அண்ணனை மேல்சிகிச்சைக்காக மதுரை அரசு மருத்துவமனைக்கு மருத்துவரின் பரிந்துரையின் பேரில் அழைத்து சென்றேன். அன்று இரவே என் அண்ணன் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். என் அண்ணனின் இறப்பிற்கு இருசக்கர வாகனத்தை வேகமாக ஓட்டி வந்த எதிரி பாலகிருஷ்ணன் தான் காரணம். போலிசார் என்னை விசாரித்தனர்.

<u>**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:-**</u>

1) சம்பவ இடத்திற்கும், என் ஊருக்கும் எவ்வளவு தூரம் என்றால் 6 கி.மீ. சாட்சி பால்பாண்டி எனக்கு என்ன உறவு முறை என்றால் மைத்துனர் உறவுமுறை. சாட்சி ராஜா, ரஜினி எனக்கு என்ன உறவு முறை என்றால் உறவு முறை இல்லை. நான் எங்கு வேலை செய்கிறேன் என்றால் வாணியங்குடி பஞ்சாயத்தில் எலெக்ட்ரிசியனா வேலை செய்கிறேன். நான் கொடுத்த புகாரை யார் எழுதியது என்றால் போலிசார்.

2) அ.சா.1 புகாரில் வாகன எண் அடித்து மேலே ஆரோ போட்டு எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் கொடுத்த புகாரிலும், போலிசார் விசாரணையிலும் என் அண்ணனுக்கு பின்னால் நான் வந்ததை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்து எத்தனை மணிநேரம் கழித்து புகார் கொடுத்தேன் என்றால் 1 மணிநேரம். காவல் நிலையத்திற்கும், சம்பவ இடத்திற்கும் 1 கி.மீ இருக்கும் என்றால் சரிதான். விபத்து நடந்த பகுதி ஆள்நடமாட்டம் உள்ள பகுதி என்றால் சரிதான்.

3) என் அண்ணன் சைக்கிளில் ஐஸ் பெட்டி கட்டியிருந்தார் என்றால் சரிதான். சம்பவ இடத்தின் கிழக்கு, மேற்கு புறத்தில் நிறைய வீடுகள் உள்ளது என்றால் ஆமாம். சம்பவ இடத்திற்கு கிழக்கு பக்கத்தில் உள்ள வீடுகளில்

உள்ள யாரும் இந்த வழக்கில் சாட்சியாக சேர்க்கப்படவில்லை என்றால் சரிதான். எதிரி ஓட்டி வந்தது அதிவேகமாக இயக்க முடியாத XL வாகனம் என்றால் சரியல்ல.

4) மற்ற இருசக்கர வாகனங்களை விட XL வாகனம் வேகமாக செல்ல முடியாது என்றால் சரியல்ல. வழிபோக்கு ஆட்டோவின் எண் தெரியுமா என்றால் தெரியாது. சம்பவ இடத்திற்கு 10 நிமிடத்தில் போலிசார் வந்தனரா என்றால் சிவகங்கை அரசு மருத்துவமனைக்கு தான் வந்தார்கள் நான் விபத்து நடந்த உடனே மருத்துவமனைக்கு என் அண்ணனை அழைத்துச் சென்றேன். விபத்துக்குள்ளான என் அண்ணனின் சைக்கிளை போலிசார் கைப்பற்றினார்களா என்றால் தெரியாது. சைக்கிளின் எந்த பகுதியில் மோதி விபத்து ஏற்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல.

5) நான் சொல்வது போல் எதிரியும், என் அண்ணனும் வடக்கிலிருந்து தெற்கு நோக்கிய ஒரே திசையில் தான் பயணித்தார்கள் என்றால் சரிதான். என் அண்ணனுக்கு எதிர் திசையில் வந்த டவுன் பஸ் வேகமாக வந்ததால் அதில் மோதாமல் இருக்க என் அண்ணன் தான் வாகனத்தை ஒதுக்கி எதிரியின் வாகனத்தின் மீது மோதிவிட்டார் என்றால் சரியல்ல. உண்மையிலேயே எதிரி மோதி விபத்து ஏற்பட்டிருந்தால் சம்பவ இட சாட்சிகளை விசாரித்திருப்பார்கள் என்றால் சரியல்ல.

6) நான் சொல்வது போல் சொன்ன தேதியில் வழக்கு சம்பவத்தை பார்க்கவில்லை என்றாலும், நான் வெளியூரில் இருந்து வந்து இறந்த நபர் என் சகோதரர் என்பதால் பார்க்காததை பார்த்தது போல் புகாரிலும், போலிசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் அன்றைய தினம் பஞ்சாயத்தில் வேலை பார்த்ததற்கான வருகைப்பதிவேட்டை போலிசாரிடம் கொடுத்தேனா என்றால் இல்லை 10.00 மணிக்கு தான் வேலைக்கு செல்வேன்.

**(ஒம்)திருமதி.J.அனிதா கிறிஸ்டி, 21.06.2023**
**நீதித்துறை நடுவர் எண்.1,**
**சிவகங்கை.**

சாட்சி அரசு எதிரிதரப்பு வழக்கறிஞர்கள் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சொல்லச்சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண். 1,
**சிவகங்கை.**